நகராட்சி அலுவலகம்,
களக்காடு.

நாள். 05.06.2023.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2023ம் வருடம் ஜுன் மாதம் 08ம் தேதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

| நாள். | தீர்மான எண். | மன்ற பொருள் | மன்றத்தின் முடிவு |
|---|---|---|---|
| 08.06.2023 | 309 | <u>பொருள் எண். 01</u><br>களக்காடு நகராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டில் தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0-ன் கீழ் ரூ. 1170.00 இலட்சத்தில் கசடு கழிவு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 129.00 இலட்சத்தில் பழுதான தார் சாலைகளை புதுப்பித்தல் பணி செய்தல் மற்றும் SUIDF திட்டத்தின் கீழ் ரூ. 246.73 இலட்சத்தில் 1644 எண்ணம் தெரு மின் விளக்குகளை எல்.இ.டி.விளக்குகளாக மாற்றம் செய்யும் பணி செய்தல் ஆகிய திட்டப் பணிகளுக்கு உரிய நிர்வாக அனுமதி பெறுவதற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு தயார் செய்து சமர்ப்பித்திட கலர் பிரிண்டிங், ஸ்பைரல் பைண்டிங், வரைபடம் தயாரித்தல் ஆகியவற்றிக்கு கீழ்கண்ட விபரப்படி பணி மேற்பார்வையாளர் அவர்களால் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. செலவினத்தை நகராட்சியின் வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு. | அரசு விதிகளை பின்பற்றி செலவினம் செய்யுமாறு அனுமதிக்கப்படுகிறது. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | வேலையின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1. | தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 2022-2023 | கசடு கழிவு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல். | 31200 |
| 2. | நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2022-2023 | பழுதான தார் சாலைகளை புதுப்பித்தல் பணி செய்தல். | 4840 |
| 3. | SUIDF திட்டம் | 1644 எண்ணம் தெரு மின் விளக்குகளை எல்.இ.டி. விளக்குகளாக மாற்றம் செய்யும் பணி செய்தல். | 3280 |
| | **மொத்தம்** | | 39320 |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td><u>அலுவலகக்குறிப்பு :</u><br>களக்காடு நகராட்சி பகுதியில் திட்டப்பணிகளுக்கு உரிய கருத்துரு தயார் செய்யும் பொருட்டு, கலர் பிரிண்டிங், ஸ்பைரல் பைண்டிங், வரைபடம் தயாரித்தல் ஆகியவற்றிற்கு பொதுப்பணி மேற்பார்வையாளர் அவர்களால் செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத் தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி செலவின தொகை ரூ. 39320/-ஐ நகராட்சியின் வருவாய் பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.06.2023</td>
<td>310</td>
<td><u>பொருள் எண். 02</u><br>களக்காடு நகராட்சியில் புதிதாக 3 ஈப்பு வாகனங்கள் (நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர்) பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதில் நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படும் வாகனங்களின் (வாகன எண். TN72CV2781 மற்றும் TN72CV2767) இரண்டாவது சர்வீஸ் ஆனது 10,000 கிலோ மீட்டரில் செய்ய வேண்டியுள்ளது. இவ்விரு வாகனங்களும் தற்போது 10,000 கிலோ மீட்டர் தூரம் கடந்து வாகனம் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, இவ்விரு வாகனங்களையும் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனமான டெரிக் மகேந்திரா, திருநெல்வேலியில் சர்வீஸ் செய்து ஆயில் மாற்றப்பட்டுள்ளது. அதற்கான செலவு தொகை ரூ. 16192/-ஐ நகராட்சியின் வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஈப்பு வாகன எண்.</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>TN72CV2781</td><td>7173</td></tr>
<tr><td>2.</td><td>TN72CV2767</td><td>9019 (7173+1846)</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>16192</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>களக்காடு நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் 3 ஈப்பு வாகனங்களுக்கு (நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர்) இரண்டாவது சர்வீஸ் மற்றும் ஆயில் மாற்றப்பட்டுள்ளது. மேற்படி, செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத் தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி செலவின தொகை ரூ. 16192/-ஐ நகராட்சியின் வருவாய் பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அரசு விதிகளை பின்பற்றி செயல்படுமாறு அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
<tr>
<td>08.06.2023</td>
<td>311</td>
<td><u>பொருள் எண். 03</u><br>களக்காடு நகராட்சியில் 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு 26.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டதில் ஒவ்வொரு பணிக்கும் இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளனர். கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகளை மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்ததில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அரசு விதிகளை பின்பற்றி செயல்படுமாறு அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர் | மதிப்பீடு ( ரூ. லட்சத்தில்) | மதிப்பீட்டினை விட கூடுதல்/குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | களக்காடு நகராட்சியில் வார்டு எண். 03, கீழப்பத்தை பெரிய தெரு மேற்கு பகுதியில் (171003R0012) பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் அமைத்தல். | திரு.P. வில்சன் | 11.00 | 0.09% குறைவு |
| | | திருமதி.என்.எம். புஷ்பம் | | 2.06% அதிகம் |
| 2. | களக்காடு நகராட்சியில் வார்டு எண். 08, நாகன்குளம் அரிசன் 2ம் தெரு தெற்கு –1ல் (171008R0127) பேவர் பிளாக் சாலை அமைத்தல். | திரு.எம். திருமலை நம்பி | 6.00 | 0.47% குறைவு |
| | | திரு.எஸ். வேலுச்சாமி | | 0.47% அதிகம் |
| 3. | களக்காடு நகராட்சியில் வார்டு எண். 06, கீழக்கருவேலன்குளம் ரைஸ்மில் தெருவில் (171006R0094) தார்சாலை அமைத்தல். | திருமதி.எஸ். அருணா | 8.20 | 0.10% அதிகம் |
| | | திருமதி. பொன்மலர் | | 0.85% அதிகம் |
| 4. | களக்காடு நகராட்சியில் வார்டு எண். 08, கீழக்கருவேலன்குளம் விஸ்வகர்மா தெரு (ரோடு) (171008R0121) பேவர் பிளாக் சாலை, வடிகால் மற்றும் பாலம் அமைத்தல். | திருமதி. என்.எம்.புஷ்பம் | 11.50 | 0.08% குறைவு |
| | | திரு.ஜா. ஜஸ்டின் பிரதீப் | | 1.00% அதிகம் |
| 5. | களக்காடு நகராட்சியில் வார்டு எண். 10, கொம்புக்காரன் அரிசன் தெருவில் (171010R0148) பேவர் பிளாக் சாலை, வடிகால் மற்றும் பாலம் அமைத்தல். | திரு.T. ஜெயராஜ் | 11.00 | 0.04% குறைவு |
| | | திரு.K. கைலாஷ் குமார் | | 5.00% அதிகம் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6. | களக்காடு நகராட்சியில் 2023-2024ம் நிதியாண்டில் வார்டு எண். 01 முதல் 27 வரை உள்ள வாறுகால், சிறுபாலங்கள் மற்றும் சாலைகள் ஆகியவற்றில் உள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்து பராமரிப்பு செய்யும் பணி. | திரு.எம். திருமலைநம்பி | 4.90 | 1.54% குறைவு | | |
| | | | | திரு.C. வேலுச்சாமி | | 1.54% அதிகம் | | |
| | | 7. | களக்காடு நகராட்சியில் 2023-2024ம் நிதியாண்டில் பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவைப்படும் கிருமி நாசினி மற்றும் பொது சுகாதார தளவாட சாமான்கள் ஆகியவற்றை கொள்முதல் பணி செய்தல். | Health Care Technology, Chennai. | 12.00 | 0.18% குறைவு | | |
| | | | | Sri Sai Industry, Chennai. | | மதிப்பீட்டின் விலைக்கு | | |
| | | 8. | களக்காடு நகராட்சியில் 2023-2024ம் நிதியாண்டில் நகராட்சிக்கு சொந்தமான வடகரை நீரேற்றும் நிலையம் மற்றும் திறந்தவெளி கிணற்றில் உள்ள நீர்மூழ்கி மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகளை பராமரித்து பழுது பார்க்கும் பணி. | திரு.ஜா. ஜஸ்டின் பிரதீப் | 3.00 | மதிப்பீட்டின் விலைக்கு | | |
| | | | | திருமதி.என்.எம். புஷ்பம் | | 8.22% அதிகம் | | |
| | | 9. | களக்காடு நகராட்சி பகுதியில் 2023-2024ம் நிதியாண்டில் JCB மற்றும் Mini Hitachi இயந்திரம் மூலம் பராமரிப்பு பணி செய்தல். | திரு.ஜா. ஜஸ்டின் பிரதீப் | 5.00 | மதிப்பீட்டின் விலைக்கு | | |
| | | | | திருமதி.என்.எம். புஷ்பம் | | 5.01% அதிகம் | | |
| | | 10. | களக்காடு நகராட்சியில் 2023-2024ம் | திரு.ஜா. ஜஸ்டின் பிரதீப் | 2.00 | மதிப்பீட்டின் விலைக்கு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதியாண்டில் வார்டு எண். 01 முதல் 27 வரை உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்யும் பணி. | திருமதி.என்.எம். புஷ்பம் | | 12.27% அதிகம் |
| 11. | களக்காடு நகராட்சியில் 2023-2024ம் நிதியாண்டில் வார்டு எண். 01 முதல் 27 வரை உள்ள சிறுமின் விசை தொட்டிகளில் ஏற்படும் பழுதுகளை பராமரிப்பு செய்யும் பணி. | திரு.ஜா. ஜஸ்டின் பிரதீப் | 4.80 | மதிப்பீட்டின் விலைக்கு |
| | | திருமதி.என்.எம். புஷ்பம் | | 5.55% அதிகம் |

<u>**அலுவலகக்குறிப்பு :**</u>

களக்காடு நகராட்சியில் 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் மேற்காண் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய வ.எண். 1ற்கான பணிக்கு திரு.P. வில்சன் என்பவருக்கும், வ.எண். 2ற்கான பணிக்கு திரு.எம். திருமலைநம்பி என்பவருக்கும், வ.எண். 3ற்கான பணிக்கு திருமதி.எஸ்.அருணா என்பவருக்கும், வ.எண். 4ற்கான பணிக்கு திருமதி.என்.எம். புஷ்பம் என்பவருக்கும், வ.எண். 5ற்கான பணிக்கு திரு.T. ஜெயராஜ் என்பவருக்கும், வ.எண். 6ற்கான பணிக்கு திரு. எம். திருமலைநம்பி என்பவருக்கும், வ.எண். 7ற்கான பணிக்கு Health Care Technology, Chennai என்ற நிறுவனத்திற்கும், வ.எண். 8ற்கான பணிக்கு திரு.ஜா.ஜஸ்டின் பிரதீப் என்பவருக்கும், வ.எண். 9ற்கான பணிக்கு திரு.ஜா.ஜஸ்டின் பிரதீப் என்பவருக்கும், வ.எண். 10ற்கான பணிக்கு திரு.ஜா.ஜஸ்டின் பிரதீப் என்பவருக்கும் மற்றும் வ.எண். 11ற்கான பணிக்கு திரு.ஜா.ஜஸ்டின் பிரதீப் என்பவருக்கும் பணி ஆணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 08.06.2023 | 312 | <u>**பொருள் எண். 04**</u><br>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூக நலத்துறையின் மான்ய கோரிக்கையின்படி, அரசாணை (நிலை) எண். 43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள். 27.07.2022, அரசாணை (நிலை) எண். 01, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள். 13.01.2023 மற்றும் தலைமைச் செயலாளர் அவர்களின் கடிதம் எண். 1021/SP1/2022, நாள். 27.01.2023ன்படி **அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும்** மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தவும், அதற்கான ஒருங்கிணைப்பு சமையற்கூட கட்டிடம் கட்டவும், இந்நகராட்சி பகுதி வார்டு எண். 26, கோவில்பத்து சமுதாய நலக்கூடம் | அனுமதிக்கப் பட்டது. |

வளாகம் பகுதியில் செயல்படுத்துவதற்கு 06.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறான இரண்டு தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர் | மதிப்பீடு ( ரூ. லட்சத்தில்) | மதிப்பீட்டினை விட கூடுதல்/குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 2022-2023ன் கீழ் கோவில்பத்து சமுதாய நலக்கூட வளாகம் புல எண். 267/1Aல் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்கும் பணி. | திருமதி. எஸ். அருணா | 25.00 | 0.15% குறைவு |
| | | திரு. மாடசாமி | | 3.21% அதிகம் |
| 2. | மாண்புமிகு. தமிழக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 2022-2023ன் கீழ் கோவில்பத்து சமுதாய நலக்கூட வளாகத்தில் அமைக்கப்பட்ட பொது சமையற்கூடத்திலிருந்து 1 முதல் 5ம் வகுப்பு வரை பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு தயாரித்து இந்நகராட்சிக்குட்பட்ட 3 பள்ளிகளில் உள்ள 91 குழந்தைகளுக்கு காலை உணவு வழங்குதல். | Senthalir Area Level Federation, Kalakad. | | மதிப்பீட்டின் விலைக்கு |
| | | Abdul Kader, Tenkasi. | | 2.36 % அதிகம். |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td><u>அலுவலகக் குறிப்பு :</u><br>1. மேற்கண்டவாறு வ.எண். 1, கட்டுமானப் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டின் விலைக்கு கொடுத்துள்ள திருமதி.எஸ். அருணா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியையும் மற்றும் வ.எண். 2, காலை உணவு வழங்கும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டின் விலைக்கு கொடுத்துள்ள Senthalir Area Level Federation, Kalakad என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.06.2023</td>
<td>313</td>
<td><u>பொருள் எண். 05</u><br>களக்காடு நகராட்சியில் அலுவலக ஆவணங்கள் அனைத்தும் கணினி மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது நான்கு கணினிகள் பயன்படுத்தப்படுகிறது. இதில் இரண்டு கணினியில் Canon பிரிண்டர்களும், 1 கணினியில் HP Laser Jet பிரிண்டரும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பிரிண்டருக்கு பயன்படுத்தப்படும் டோனர்கள் LPC 12A டோனர் 8 எண்ணம் மற்றும் FTC 88A PRIMO டோனர் 2 எண்ணம் மொத்தம் 10 எண்ணம் வாங்குவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறான விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>டோனர் வகை</th><th>டோனர் எண்ணிக்கை</th><th>விலை</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td>மேலகரம் பிரிண்டிங் ஒர்க்ஸ் கோ–ஆப் சொசைட்டி, தென்காசி.</td><td>LPC 12A</td><td>8</td><td>61440</td></tr>
<tr><td>மேலகரம் பிரிண்டிங் ஒர்க்ஸ் கோ–ஆப் சொசைட்டி, தென்காசி.</td><td>FTC 88A PRIMO</td><td>2</td><td>12280</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td>தந்தை பெரியார் கான்ட்ராக்ட் லேபர் சர்வீஸ் கோ–ஆப் சொசைட்டி, ஆலங்குளம்.</td><td>LPC 12A</td><td>8</td><td>64800</td></tr>
<tr><td>தந்தை பெரியார் கான்ட்ராக்ட் லேபர் சர்வீஸ் கோ–ஆப் சொசைட்டி, ஆலங்குளம்.</td><td>FTC 88A PRIMO</td><td>2</td><td>12900</td></tr>
</table>
</td>
<td>அரசு விதிகளின்படி செலவினம் செய்யுமாறு அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td rowspan="2">3.</td><td>இம்மானுவேல் கம்ப்யூட்டர் இன்ஜியரிங் சர்வீஸ் கோ–ஆப் சொசைட்டி, ஆலங்குளம்.</td><td>LPC 12A</td><td>8</td><td>62400</td></tr>
<tr><td>இம்மானுவேல் கம்ப்யூட்டர் இன்ஜியரிங் சர்வீஸ் கோ–ஆப் சொசைட்டி, ஆலங்குளம்.</td><td>FTC 88A PRIMO</td><td>2</td><td>12800</td></tr>
</table>
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td></td>
<td>
<u>அலுவலகக் குறிப்பு :</u>
<ol>
<li>மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த மேலகரம் பிரிண்டிங் ஒர்க்கர்ஸ் இண்டஸ்ட்ரியல் கோ–ஆப் சொசைட்டி, தென்காசி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை அனுமதிக்கலாம்.</li>
<li>மேற்கண்ட கணினி உபகரணம் பெறும் வகைக்கான செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.06.2023</td>
<td>314</td>
<td>
<u>பொருள் எண். 06</u><br>
களக்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 32945/2022/EA2–SWM–9, நாள். 10.01.2023 மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், களக்காடு நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ. 221.51 இலட்ச மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக 27.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறான இரண்டு தகுதியான நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின்அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல்/ குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>Implementation of Solid Waste Management activities through Service Provider / Agency / Contractor in Kalakad Municipality.</td><td>KRS Service, 3/97, Manickam Street, Mannurpet, Chennai – 50.</td><td>221.51</td><td>0.05% குறைவு</td></tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>Ponraj Enterprises, Elumalai Street, Moovendar Nagar, Pammal, Chennai –75.</td><td></td><td>0.27% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு :</u><br>
1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ள KRS Service, 3/97, Manickam Street, Mannurpet, Chennai–50 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.06.2023</td>
<td>315</td>
<td>
<u>பொருள் எண். 07</u><br>
அரசாணை எண். 36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2), நாள். 10.03.2023ல், மின் ஆற்றல் சேமிப்பு நடவடிக்கையாக களக்காடு நகராட்சி பகுதியில் உள்ள 1644 எண்ணம் தெரு மின் விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றம் செய்திட மாநில அளவிலான அனுமதி குழுவினரால் அனுமதிக்கப்பட்டு மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் 5 % வட்டியில் 6 வருடத்தில் திரும்ப செலுத்தும் விதமாக கடன் பெற்று பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 1644 எண்ணம் தெரு விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றம் செய்யும் பணி மேற்கொள்ள ரூ. 246.73 இலட்ச மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக 12.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறான இரண்டு தகுதியான நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல்/குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>களக்காடு நகராட்சி பகுதியில் உள்ள 1644 எண்ணம் தெரு மின்</td><td>முருகன் எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை.</td><td>246.73</td><td>மதிப்பீட்டின் விலைக்கு</td></tr>
</table>
</td>
<td>அரசு விதிகளின்படி, செயல்பட அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>விளக்குகளை எல்.இ.டி. விளக்குகளாக மாற்றம் செய்யும் பணி.</td><td>குமரன் இன்டஸ்ட்ரீஸ், சென்னை.</td><td></td><td>10.52% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு :</u><br>
1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ள முருகன் எலக்ட்ரிக்கல்ஸ், 288, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.06.2023</td>
<td>316</td>
<td>
<u>பொருள் எண். 08</u><br>
களக்காடு பேரூராட்சியானது 01.11.2021 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்கண்டவாறு தரம் உயர்த்தப்பட்ட நிலையில், அரசாணை எண். 10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நபர) துறை, நாள். 23.01.2023ன்படி, பொதுப்பிரிவு, வருவாய்ப் பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு கூடுதலாக அலுவலர்கள் / பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டு நிரப்பப்பட்டு வரப்படுகிறது. எனவே, கூடுதலாக உள்ள அலுவலர்கள் / பணியாளர்களுக்கு மேசை மற்றும் நாற்காலிகள் மற்றும் அலுவலகக் கோப்புகளை பாதுகாப்பாக வைக்க அலமாரிகள் தேவைப்படுவதால் அதனை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், இதர அலுவலக மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளும் வகைக்கான பணிகளுக்கு ரூ. 4.95/- இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>
<u>அலுவலகக் குறிப்பு :</u><br>
1. மேற்கண்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அரசு விதிகளின்படி, செலவினம் செய்யுமாறு அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 08.06.2023 | 317 | <u>பொருள் எண். 09</u><br>களக்காடு நகராட்சியானது பேரூராட்சி நிலையிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, தரம் உயர்த்தப்பட்ட நிலைக்கு ஏற்றவாறு பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநரால் நியமிக்கப்பட்டு வரப்படுகிறது. எனவே, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் இருக்கை பணியாளர்களுக்கு பணிகளை திறம்பட செய்ய ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக கணினி மற்றும் பிரிண்டர்கள் தேவைப்படுகிறது. மேலும், நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர்களின் அறைகளுக்கு குளிர்சாதன வசதி செய்யவும், மேற்கண்ட பணிகளுக்கு ரூ. 4.95/- இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><u>அலுவலகக் குறிப்பு :</u><br>1. மேற்கண்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதிகளின்படி, செலவினம் செய்யுமாறு அனுமதிக்கப் படுகிறது. |
| 08.06.2023 | 318 | <u>பொருள் எண். 10</u><br>தமிழக அரசின் ஈராண்டு சாதனைகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் பிளக்ஸ் பேனரில் அச்சிட்டு பொது இடங்களில் வைத்து விளம்பரப்படுத்த சென்னை நகராட்சிகளின் இயக்குநர் மற்றும் திருநெல்வேலி நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரைப்படி விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான செலவு தொகையினை (ரூ. 4200/-) நகராட்சியின் வருவாய் பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>அலுவலகக் குறிப்பு :</u><br>1. தமிழக அரசின் ஈராண்டு சாதனைகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் பிளக்ஸ் பேனரில் அச்சிட்டு பொது இடங்களில் வைத்து விளம்பரம் செய்த வகைக்கு ரூ. 4200/-ஐ செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவுத் தொகை நகராட்சியின் வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 08.06.2023 | 319 | <u>பொருள் எண். 11</u><br>களக்காடு நகராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் (NSMT) கீழ் பழுதடைந்த தார் சாலைகளை புதிய தார்சாலைகளாக அமைப்பதற்கு அரசாணை எண். 192, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.03.2023ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், களக்காடு நகராட்சி பகுதியில் நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ. 129.00 இலட்ச மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக 27.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி | அனுமதிக்கப் படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | கோரப்பட்டதில், கீழ்கண்டவாறான இரண்டு தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின்அனுமதிக்கு. | |

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | மதிப்பீட்டினை விட கூடுதல்/ குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | களக்காடு நகராட்சியில், கருப்பன்தோப்பு ரோடு (171001R0015), நடராஜர் நகர் பிள்ளையார் கோவில் தெரு வடக்கு-1 (ரோடு) (171005R0075), நடராஜர் நகர் தெற்கு ரதவீதி (ரோடு) (171005R0077), சிங்கம்பத்து முஸ்லீம் கீழத்தெரு 1 (ரோடு) (171009R0133), சிங்கம்பத்து முஸ்லீம் நடுத்தெரு 2 (ரோடு) (171009R0135), மெயின் ரோடு முஸ்லீம் தெரு (ரோடு) (171009R0139), பிள்ளைமார் வடக்கு தெரு 1 (ரோடு) (171009R0140), பாரதிபுரம் மெயின் ரோடு (171010R0151), கோட்டை விஸ்வகர்மா ஆற்றங்கரை ரோடு (171018R0235), | திருமதி. பொன் மலர், திருநெல்வேலி. | 129. 00 | மதிப்பீட்டின் விலைக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆற்றங்கரை தெரு – 1 (171022R0278), சிதம்பராபுரம் ராஜபுதூர் நாடார் வடக்கு தெரு (ரோடு) (171023R0282), சிதம்பராபுரம் வடக்கு ரதவீதி (ரோடு) (171024R0290), சிதம்பராபுரம் கீழரதவீதி வடக்கு பகுதி (ரோடு) (171024R0291), சிதம்பராபுரம் போஸ் தெரு கிழக்கு (ரோடு) (171024R0292), சிதம்பராபுரம் கீழரதவீதி தெற்கு பகுதி–1 (ரோடு) (171025R0296), சிதம்பராபுரம் கீழரதவீதி தெற்கு பகுதி–2 (ரோடு) (171025R0297). சிதம்பராபுரம் கீழரதவீதி தெற்கு பகுதி–3 (ரோடு) (171025R0298) ஆகிய தெருக்களில் தார்சாலை புதுப்பித்தல் பணி. | | | |
| | | திருமதி. சாந்தா ஷீலா, திருநெல்வேலி. | | 0.45% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டின் விலைக்கு கொடுத்துள்ள திருமதி.பொன்மலர், திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

<table>
<tr>
<td>08.06.2023</td>
<td>320</td>
<td>
<u>பொருள் எண். 12</u><br>
களக்காடு நகராட்சியில் 2022–2023 ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்ய திட்டம் (Tied Grant)–ன் கீழ் முதல்நிலை சேகரத்திற்கு தேவையான 7 எண்ணம் லித்தியம் பேட்டரியுடன் கூடிய மின்கல வாகனம் சப்ளை செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 18277/2022/சிஎப்சி–1, நாள். 21.03.2023ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ரூ. 14.00 இலட்ச மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக 24.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறான இரண்டு தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின்அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல்/ குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி, முதல்நிலை சேகரத்திற்கு தேவையான 7 எண்ணம் லித்தியம் பேட்டரியுடன் கூடிய மின்கல வாகனம் சப்ளை செய்தல்.</td><td>RDS Industries, Ambur.</td><td rowspan="2">14.00</td><td>மதிப்பீட்டின் விலைக்கு</td></tr>
<tr><td>VSL Industries, Chennai.</td><td>6.38% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு :</u><br>
1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டின் விலைக்கு கொடுத்துள்ள RDS Industries, Ambur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாருக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>08.06.2023</td>
<td>321</td>
<td>
<u>பொருள் எண். 13</u><br>
களக்காடு நகராட்சியில் 2023–2024 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0ன் கீழ் நகராட்சி பகுதியில் கசடு கழிவு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் 8 இடங்களில் நீர்நிலைகளில் சேரும் கழிவுநீர்களை குழாய் மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்புதல் மற்றும் அதனை சார்ந்த கட்டிட அமைப்புகள் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின்
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

ந.க.எண். 9192/2022/SBM–1, நாள். 20.03.2023ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ரூ. 1170.00 இலட்ச மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக 10.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறான இரண்டு தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | மதிப்பீட்டினை விட கூடுதல்/ குறைவு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | சிதம்பராபுரம் மயானத்தில் கசடு கழிவு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டிட அமைப்புகள் மற்றும் இதர உள்கட்டமைப்புகள் அமைக்கும் பணி. | திரு. மாடசாமி, திருநெல்வேலி. | 821.00 | 0.01% குறைவு |
| | | திருமதி.சாந்தா ஷீலா, திருநெல்வேலி. | | 0.04% அதிகம் |
| 2. | களக்காடு நகராட்சியில் 8 இடங்களில் நீர்நிலைகளில் சேரும் கழிவுநீர்களை குழாய் மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்புதல் மற்றும் அதனை சார்ந்த கட்டிட அமைப்புகள் அமைக்கும் பணி. | திரு. மாடசாமி, திருநெல்வேலி. | 349.00 | 0.02% குறைவு |
| | | திருமதி.சாந்தா ஷீலா, திருநெல்வேலி. | | 0.19% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 1 மற்றும் 2–ற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. மாடசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

<table>
<tr>
<td>08.06.2023</td>
<td>322</td>
<td>
<u>பொருள் எண். 14</u><br>
களக்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகளுக்காக பயன்படுத்தப்படும் பொது சுகாதார வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்றிதழ் பெற அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் நிறுவனங்களிடம் பழுது நீக்கப் பணிகள் செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண். 233, நாள். 27.02.2023ன்படி ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>வாகன விபரம்</th><th>ஆர்.வி. ஆர். மோட்டார் ஒர்க்ஸ், அம்பாசமுத்திரம்.</th><th>நம்பி மோட்டார் ஒர்க்ஸ், வண்ணார்பேட்டை, திருநெல்வேலி.</th><th>பிரபா மோட்டார் ஒர்க்ஸ், திருமலையப்பபுரம், அம்பாசமுத்திரம்.</th></tr>
<tr><td>1.</td><td>டிராக்டர் மற்றும் டிரைலர் (TN72V2980 & TN72V2981</td><td>111741</td><td>117400</td><td>114200</td></tr>
<tr><td>2.</td><td>டாடா ஏஸ் (TN72BV2706)</td><td>37860</td><td>40620</td><td>41500</td></tr>
<tr><td>3.</td><td>டாடா ஏஸ் (TN72AU6638)</td><td>24600</td><td>27180</td><td>26400</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு :</u><br>
1. வ.எண். 1ல் கண்ட வாகனத்தை பழுது நீக்கம் செய்ய குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஆர்.வி.ஆர். மோட்டார் ஒர்க்ஸ், அம்பாசமுத்திரம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்பு கொள்ளலாம்.<br>
2. வ.எண். 2ல் கண்ட வாகனத்தை பழுது நீக்கம் செய்ய குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஆர்.வி.ஆர். மோட்டார் ஒர்க்ஸ், அம்பாசமுத்திரம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்பு கொள்ளலாம்.<br>
3. வ.எண். 3ல் கண்ட வாகனத்தை பழுது நீக்கம் செய்ய குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஆர்.வி.ஆர். மோட்டார் ஒர்க்ஸ், அம்பாசமுத்திரம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்பு கொள்ளலாம்.<br>
4. மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அரசு விதிகளுக்கு உட்பட்டு செலவினம் செய்யுமாறு அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 08.06.2023 | 323 | **<u>பொருள் எண். 15</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமையப் பெற்றுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, திறந்தவெளி கிணறு, உறை கிணறு, பொது குடிநீர் குழாய் மற்றும் ஆழ்குழாய்களில் இருந்து பெறப்படும் நீரினை பகுப்பாய்வு செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பகுப்பாய்வாளரால் இந்நகராட்சியில் 10.05.2023 அன்று குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டது. மேற்கண்ட பணிகளுக்காக பிளாஸ்டிக் கேன் மற்றும் வண்டி வாடகை ரூ. 5500/- செலவு செய்யப்பட்டுள்ளது என குடிநீர் பராமரிப்பாளரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவு தொகையினை சம்பந்தப்பட்ட குடிநீர் பராமரிப்பாளர் தனது சொந்த செலவில் மேற்கொண்டுள்ளதால், அத்தொகையினை அன்னாருக்கு விடுவிக்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>1. அவசர அவசியம் கருதி இந்நகராட்சி குடிநீர் திட்டப் பணியாளரால் மேற்கொள்ளப்பட்ட செலவினத் தொகை ரூ. 5500/- ஐ சம்பந்தப்பட்ட பணியாளருக்கு வழங்கலாம்.<br>2. மேற்கண்ட செலவு தொகையினை குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதிகளின்படி செலவினம் செய்யுமாறு அனுமதிக்கப் படுகிறது. |
| 08.06.2023 | 324 | **<u>பொருள் எண். 16</u>**<br>களக்காடு நகராட்சிப் பகுதிகளில் ஒப்பந்ததாரர்களால் நடைபெற்று வரும் திட்டப் பணிகளுக்கு பட்டியல் தொகை வழங்கப்படும் போது பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் GST வரி தொகையினை உரிய துறைகளுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு கணக்கிட்டு Return Filling Charges செய்து தரும் Relywin Tax info service, Kovilpatti என்ற தனியார் நிறுவனத்திற்கு மேற்கண்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட கேட்பு பட்டியலின்படி, ரூ. 9600/- ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>1. மேற்கண்ட தனியார் நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட கேட்பின்படி, ரூ. 9600/-ஐ சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவு தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதிகளின்படி, செலவினம் செய்யும்படி அனுமதிக்கப் படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| 08.06.2023 | 325 | <u>**பொருள் எண். 17**</u><br>களக்காடு நகராட்சியில் வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, மாநில அளவிலான நாளிதழ் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி மலரில் பிரசுரம் செய்த வகைக்கு Shresta Communications, Chennai என்ற நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கேட்பின்படி, ரூ. 57960/– ஐ சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>**அலுவலகக் குறிப்பு :**</u><br>1. மேற்கண்ட தனியார் நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட கேட்பின்படி, ரூ. 57960/–ஐ சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவு தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதிகளின்படி, செலவினம் செய்யும்படி அனுமதிக்கப் படுகிறது. |
| 08.06.2023 | 326 | <u>**பொருள் எண். 18**</u><br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 17, காந்தி வீதியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி பரிந்துரை திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பல்நோக்கு பயன்பாட்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி, கட்டிடத்திற்கு மின் இணைப்பு பெறும் வகைக்கு தமிழ்நாடு மின் வாரிய பகிர்மான கழகம், களக்காடு பெறப்பட்ட கேட்பின்படி ரூ. 3986/– ஐ செலுத்த மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><u>**அலுவலகக் குறிப்பு :**</u><br>1. மேற்படி கட்டிடத்திற்கு புதிய மின் இணைப்பு பெற தமிழ்நாடு மின் வாரிய பகிர்மான கழகத்தால் பெறப்பட்ட கேட்பு தொகையான ரூ. 3986/– ஐ செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவு தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். அவசர அவசியம் கருதி மேற்கண்ட தொகையினை இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் செலுத்தப்பட்டதை அன்னாருக்கு விடுவிக்க மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதிகளின்படி, செலவினம் செய்யுமாறு அனுமதிக்கப் படுகிறது. |
| 08.06.2023 | 327 | <u>**பொருள் எண். 19**</u><br>களக்காடு நகராட்சி பகுதியில் மொத்தம் 2108 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி தெரு விளக்குகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்ய தற்போது 400 எண்ணம் குழல் விளக்குகள், 400 எண்ணம் சோக்குகள், 1/18 காப்பர் வயர் 6 காயில், 3/20 காப்பர் வயர் 2 காயல், 2/20 காப்பர் வயர் 1 காயல் மற்றும் 100 டேப் ரோல் ஆகியன தேவைப்படுகிறது. மேற்படி தெருவிளக்கு உதிரி பாகங்களை கொள்முதல் செய்ய உள்ளூர் விற்பனை நிலையங்களிலிருந்து கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள விற்பனை நிலையத்திலிருந்து மேற்கண்ட மின் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு. | அரசு விதிகளின்படி, செலவினம் செய்யுமாறு அனுமதிக்கப் படுகிறது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>

<table>
<tr><th>வ. எண்.</th><th>தெருவிளக்கு உதிரி பாகங்களின் வகை</th><th>பரகத் எலக்ட்ரிக்கல்ஸ், களக்காடு.</th><th>ரிஷாப் எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி டவுண்.</th><th>அபி எனர்ஜி பிரைவேட் லிமிடெட், திருநெல்வேலி.</th></tr>
<tr><td>1.</td><td>Crompton 40W Tube</td><td>ரூ. 45/- (ஒன்றுக்கு)</td><td>ரூ. 50/- (ஒன்றுக்கு)</td><td>ரூ. 49/- (ஒன்றுக்கு)</td></tr>
<tr><td>2.</td><td>Crompton Electronic Choke</td><td>ரூ. 275/- (ஒன்றுக்கு)</td><td>ரூ. 290/- (ஒன்றுக்கு)</td><td>ரூ. 288/- (ஒன்றுக்கு)</td></tr>
<tr><td>3.</td><td>1/18 Copper Wire</td><td>ரூ. 2100/- (ஒரு காயில்)</td><td>ரூ. 2250/- (ஒரு காயில்)</td><td>ரூ. 2200/- (ஒரு காயில்)</td></tr>
<tr><td>4.</td><td>3/20 Copper Wire</td><td>ரூ. 4500/- (ஒரு காயில்)</td><td>ரூ. 4600/- (ஒரு காயில்)</td><td>ரூ. 4600/- (ஒரு காயில்)</td></tr>
<tr><td>5.</td><td>Tape Roll</td><td>ரூ. 15/- (ஒன்றுக்கு)</td><td>ரூ. 18/- (ஒன்றுக்கு)</td><td>ரூ. 17/- (ஒன்றுக்கு)</td></tr>
<tr><td>6.</td><td>7/20 Copper Wire</td><td>ரூ. 8300/- (ஒரு காயில்)</td><td>ரூ. 8500/- (ஒரு காயில்)</td><td>ரூ. 8400/- (ஒரு காயில்)</td></tr>
</table>

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில், பரகத் எலக்ட்ரிக்கல்ஸ், களக்காடு என்ற நிறுவனம் வழங்கியுள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம். மேற்படி நிறுவனத்திடமிருந்து சம்பந்தப்பட்ட தெருவிளக்கு உபகரணங்களை கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவு தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.06.2023</td>
<td>328</td>
<td>

<u>பொருள் எண். 20</u>

இந்நகர்மன்ற தீர்மான எண். 141, நாள். 30.08.2022ன்படி, வார்டு எண். 26, காவல் தெரு மற்றும் மேலக்கட்டளை தெருவில் ரூ. 0.39/- இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் பைப் லைன் விஸ்தரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதித்துள்ளது. தற்போது மேற்கண்ட இடத்தில் அப்பணிகளை செய்ய சாத்தியமில்லாததால் அதே வார்டில் கோவில்பத்து பால் பண்ணைக்கு எதிரே உள்ள சின்டெக்ஸ் டேங்கிலிருந்து கோவில்பத்து செட்டியார் தெரு மற்றும் கோவில்பத்து அம்மன் கோவில் சந்து ஆகிய தெருக்களுக்கு பைப் லைன் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. புதிதாக தேர்வு செய்யப்பட்ட இடத்தில் அதே மதிப்பீட்டில் மேற்படி குடிநீர் விஸ்தரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவுத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

</td>
<td>அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 08.06.2023 | 329 | **<u>பொருள் எண். 21</u>**<br>இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக இருந்து வந்த திரு.ஜெ. ஜாண்சன் துரை என்பவர் 30.04.2023 அன்று இயற்கை எய்திய காரணத்தினால், அன்னார் இந்நகராட்சியில் மேற்கொண்டு வந்த ஒப்பந்தப்பணிகளை அவரது மனைவி திருமதி.ஜெ. பிரின்ஸஸ் ஜெயா என்பவர் தொடர்ந்து மேற்கொள்ள கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி கடிதத்தினை மன்ற ஒப்புதலுக்கும், அனுமதிக்கும்.<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதிகளின்படி செயல்படுமாறு அனுமதிக்கப் படுகிறது. |
| 08.06.2023 | 330 | **<u>பொருள் எண். 22</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 5, நடராஜர் சன்னதி தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு ரூ. 5.00/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>1. மேற்படி மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் படுகிறது. |
| 08.06.2023 | 331 | **<u>பொருள் எண். 23</u>**<br>களக்காடு நகராட்சியின் 2022-2023 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு தயார் செய்யப்பட்ட நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>மன்றம் பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் படுகிறது. |